சார்பு நீதிமன்றம், ஜெயங்கொண்டம்
OS.No.61 /2022

Date: 06.08.2026. (2057 திருவள்ளுவராண்டு ஆடித்திங்கள் 21ம் நாள்)

வா.சா.1 மாணிக்கம் த./பெ.முத்துகுமரபிள்ளை ,

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி. தொடர்ச்சி**

நான் இந்த வழக்கில் 24 அயிட்ட சொத்துகளில் 3 வது இனச்சொத்து சர்வே எண்.324/8 ல் கட்டுப்பட்ட 3 ஏர்ஸ் தவிற மற்ற 23 இனச் சொத்துகளும், சரோஜா எழுதிவைத்த 04.04.2018 ல் ஏற்பட்ட உயிலில் உள்ளன என்றால் சரிதான். தாவா 23 மற்றும் 24 இனச் சொத்துகள் மேற்படி உயிலில் கட்டுபட்டிருந்தாலும், 24.04.1981 ல் வா.சா..ஆ1ன்படி ஏற்பட்ட பாக அட்டவணையில் கட்டுபடாத சொத்துகள் மற்றும் என் தந்தை முத்துகுமரபிள்ளைக்கு பாத்தியப்பட்ட பொதுகுடும்ப சொத்துகள் என்பது என் கட்சி. எனது தந்தை முத்துகுமரபிள்ளைக்கு 3 ஆண் மக்கள், 2 பெண் மக்கள் ஆக மொத்தம் 5 பிள்ளைகள் என்றால் சரிதான். எனது தந்தைக்கு கமலா, சரோஜா, மாணிக்கம், ராமலிங்கம், சாமிநாதன் ஆகிய 5 பிள்ளைகள் என்றால் சரிதான். எங்களது சகோதரிகள் கமலா, சரோஜா இறந்த பிறகு அவர்களுக்கு வாரிசுகள் உள்ளனர் என்றால் சரிதான். எங்களது சகோதரி சரோஜாவின் மகன்கள்தான் 1, 2 பிரதிவாதிகளான வெங்கடேசன், ரவிசந்திரன் என்றால் சரிதான். அவருக்கு அமுதா, சாந்தி, கலா, ஆகிய 3 மகள்களும் வாரிசுகள், கமலாவின் மகன் ராமலிங்கம் இறந்தபின் அவரது மகள்கள் கமலாதேவி, ஜனனி ஆகியோர் உள்ளார்கள் என்றால் சரிதான். சாமிநாதன் மற்றும் அவரது மனைவி அமுதா குழந்தைகள் ஏதும் இன்றி இந்த 1, 2 பிரதிவா்திகளுக்கு சாமிநாதன் பாகத்திற்கு கிடைக்க வேண்டிய சொத்துகளை உயில் எழுதிவைத்துவிட்டார்கள் என்றால் சரிதான் அது மோசடியானது. தாவா 23, 24 இனச் சொத்துகள் பொதுகுடும்ப சொத்துகள் என நிரூபிக்கும் பட்சத்தில் முத்துகுமரபிள்ளையின் வாரிசுகளான 5 பேருக்கும் அவர்களது வாரிசுகளுக்கும் உரிமையானது என்றால் சரியல்ல. தாவா 23, 24 இனச் சொத்துகளை பொறுத்து கமலாவிடமோ அல்லது சரோஜாவிடமோ அல்லது அவர்களது வாரிசுகளிடமோ விடுதலை ஆவணம் அல்லது பாக அட்டவணை ஏதும் எழுதிக்கொண்டோமா என்றால் இல்லை. அந்த சொத்துகளில் எனக்கு 2/3 பாகமும், ராமலிங்கத்திற்கு 1/3 பாகமும் சேரவேண்டியது அதில் எனது சகோதரிகளுக்கு பங்கு இல்லை. நான் சொல்லுவது தவறு என்றும் திருத்தப்பட்ட இந்து வாரிசுரிமை சட்டம் 2005 ன் படி பாகம்

பிரியாத சொத்துகளில் பெண் பிள்ளைகளுக்கும் சம பங்கு கிடைக்கத்தக்கது என்ற அடிப்படையில் எனது சகோதரிகளான கமலததிற்கும், சரோஜாவிற்கும், தலா 1/5 பாகம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. 23, 24 இனச் சொத்துகள் எங்களுக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துகள் என்பதால் அவற்றை உயிலில் சேர்த்து எழுதிவைத்தது தவறு என்பது எங்கள் கட்சி. எங்களது சகோதரர் சாமிநாதனின் மனைவி தனது கணவருக்கு சாமிநாதன பாகத்திற்கு கிடைக்கவேண்டிய சொத்துகளை தனது சகோதரர்களான 1, 2 பிரதிவாதிகளுக்கு உயில் எழுதி வைத்திருப்பது சட்டப்படி செல்லதக்கது என்றால் சரியல்ல. 3 வது இனச் சொத்தை பொறுத்து எனது சகோதரி மகள் அமுதா கிரையம் முன்பணம் பெற்றிருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அமுதா இறந்தபிறகு அவர் பெற்ற கிரைய முன்பணத்தை கொடுத்தவர்கள் என்னிடம் அனுகி கேட்டார்களா என்றால் இல்லை. அமுதா இறந்தபிறகு அமுதா பெற்ற கிரைய முன்பணத்தை 1, 2 பிரதிவாதிகள் கொடுத்து தீர்த்துவிட்டனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா 3 வது இனச் சொத்து எனக்கு பாத்தியம் இல்லை என்பதால்தான் அமுதாவிடம் கிரைய முன்பணம் கொடுத்தவர்கள் என்னை அனுகவில்லை பணத்தை திரும்ப கேட்கவில்லை என்றால் சரியல்ல. அமுதா அவரது கணவர் 2010 ல் இறந்தபிறகு 2022 வரை உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். அமுதாவிற்கும் எனக்கும் அவர் உயிருடன் இருந்தவரை தொடர்பில்லை என்றும், இறந்தபிறகு அவரது கருமகாரியத்தை முற்றாக துறந்தேன் என்றால் சரிதான். அமுதாவின் கருமகாரியம் ஜெயங்கொண்டத்தில் வைக்காமல் அமுதா பிறந்த ஊரான இளையபெருமாள் நல்லூரில் வைத்ததால் நான் கலந்துகொள்ளவில்லை. ஜெயங்கொண்டம் கடைவீதியில் உள்ள இந்தியன் வங்கி கட்டிடம் எனது தம்பி சாமிநாதனுக்கு சொந்தமானது என்றால் சரிதான். அதன் மாடியில் 2 குடியிருப்பு வீடுகள் உள்ளன என்றால் சரிதான். அந்த இந்தியன் வங்கி கட்டிடத்தை தனது தம்பிகளான 1, 2 பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் பாத்தியப்படுத்தி எழுதி வைத்து தனது தம்பிகளுடன் குடியிருந்தார் என்றால் குடியிருந்தார் அந்த செட்டில்மெண்ட் பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்ட பிறகு இந்தியன் வங்கி கட்டித்தின் வாடகையை பெற நான் எதுவும் முயற்சி எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை அது தேவையும் இல்லை. அமுதா தனது கணவர் இறந்தபிறகு தனது கணவரின் பாகசொத்துகள் தனது தம்பிகளான 1, 2

பிரதிவாதிகளுக்கு கிடைக்கவேண்டுமென்ற எண்ணத்தில் செட்டில்மெண்ட் உயில் போன்ற ஆவணங்களை எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல. அதனால் அமுதாவின் எண்ணப்படி 3 வது இனச்சொத்தும் 1, 2 பிரதிவாதிகளுக்கு சேரவேண்டியது என்றால் சரியல்ல. அமுதா உயிருடன் இருந்தபோது என்னுடன் சேர்ந்தும் தனியாகவும், 3 வது நபர்களுக்கு சில சொத்துகளை பொறுத்து கிரைய ஆவணங்கள் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான், அமுதா தனியாக எழுதிக்கொடுத்த சொத்துகளை பற்றி தெரியாது. அமுதா எழுதி வைத்த உயில் 04.04.2018 ல் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அது மோசடியானது. கடந்த 25.11.2013 ம் தேதியிலும், 16.05.2019 தேதியிலும் நானும் 3 ம் பிரதிவாதி பாலாஜியும், அமுதாவும் சேர்ந்து முறையே உதயநத்தம் பிரசாத் என்பவருக்ம், பிச்சனூர் சுரேஷ் என்பவருக்கும் பதிவு கிரைய ஆவணங்கள் எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். இந்த 2 கிரைய ஆவணங்களின்படி சட்டப்படி எழுதிக்கொடுக்கப்பட்டு கிரையம் பெற்றவர்கள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி கிரையங்கள் நல்ல மனநிலையில் எழுதிக்கொடுத்தது போல அமுதா 04.04.2018 ல் நல்ல மனநிலையில் திட்டமிட்டு சாட்சிகளை வரவழைத்து இயற்கையான நம்பிக்கைகுரிய தம்பிகளான 1, 2 பிரதிவாதிகளுக்கு பதிவு உயில் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், அவர் இறந்தபிறகு உயில் நடைமுறைக்கு வந்துவிட்டது என்றும் அது சட்டபடி என்னையும் கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. தாவா 3 வது இனச் சொத்து அவசர தேவைக்காக அமுதாவால் முன்பணம் பெறபட்டு இருந்ததால் அந்த சொத்தை 04.04.2018 ல் ஏற்பட்ட உயிலில் காட்டவில்லை என்றும், ஆனால் அமுதாவின் விருப்பம் தாவா 3 வது இனச் சொத்து 1, 2 பிரதிவாதிகளுக்கு

சேரவேண்டுமென்பது தான் என்றால் சரியல்ல. தாவா செலவுதொகையுடன் தள்ளுபடி ஆக வேண்டுமென்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

RAMASAMY RAJAMAHESWAR Digitally signed by RAMASAMY RAJAMAHESWAR

சார்பு நீதிபதி,
ஜெயங்கொண்டம்.